# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2409 - 2024 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2024.11.01

*2409 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2123 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2122 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம்- அக்கரைப்பற்று**

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2024

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் 2024.11.09 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

2. பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

5. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

A.C. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
அக்கரைப்பற்று.

**சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | இலக்கம் இல்லை | மோட்டார் சைக்கிள் (TI 8124 Star City) | 01 |
| 02 | இலக்கம் இல்லை | மோட்டார் சைக்கிள் (HUNK) | 01 |
| 03 | இலக்கம் இல்லை | மோட்டார் சைக்கிள் ( PULSAR 135 WC 1368) | 01 |
| 04 | AR/2577/23 | மோட்டார் சைக்கிள் ( EP MN 7058) | 01 |
| 05 | AR/2590/23 | டிப்பர் வாகனம் 226- 2221 | 01 |
| 06 | 68231/MIS/24 | கை உழவு இயந்திரம் EPSB7198 | 01 |
| 07 | 66328/MIS/23 | இழுவைப் பெட்டி EP RX 4278 | 01<br>01 |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 08 | AR/ 2561/23 | துவிச்சக்கர வண்டி | 06 |
| 09 | 68341/ F/23 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 10 | 68643/ MICS/ 24 | சுத்தியல் | 01 |
| | 68643/ MISC/ 24 | அலவாங்கு | 03 |
| 11 | இலக்கம் இல்லை | கோடரி | 05 |
| 12 | AR/ 2944/23 | நீர் இறைக்கும் மோட்டார் | 01 |

11- 32

---

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2024, செத்தெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் PV 2045 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட அனந்தய வாத்துவ லாஃப்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் ஆனது PB 491 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட லாஃப்ஸ் லெஷர் லிமிட்டட் உடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 242(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் நாம் அறிவித்தலை வழங்குகின்றோம்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியானது லாஃப்ஸ் லெஷர் லிமிட்டட் ஆகும்.

எச்.ஆர்.எஸ்.எஸ். ஹதேகொட,
கம்பனிச் செயலாளர்.

11- 14/1

---

## அறிவித்தல்

2024, செத்தெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் PV 2045 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட அனந்தய வாத்துவ லாஃப்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் ஆனது PB 491 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட லாஃப்ஸ் லெஷர் லிமிட்டட் உடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 242(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் நாம் அறிவித்தலை வழங்குகின்றோம்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியானது லாஃப்ஸ் லெஷர் லிமிட்டட் ஆகும்.

கம்பனிச் செயலாளர்,
பி டபிள்யூ கார்ப்பரேட் செக்ரட்டேரியல்
(பிரைவேட்) லிமிட்டெட்,
லாஃப்ஸ் லெஷர் லிமிட்டெட்.

11- 14/2

## பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விபரம் குறிப்பிட்ட கம்பனிச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் முன்னைய பெயர்: கலம்பு கோட்யாட்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம்: பிவி 72680
பதிவு செய்யப்பட்ட முகவரி: 435, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 3
கம்பனியின் புதிய பெயர்: கலம்பு கோர்ட் ஹொடெல் ( பிரைவட்) லிமிட்டட்

செயலாளர்கள்.
சீ ஏ எஸ் கோப்பரேட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்.

---

11- 21

## குறுகியகால ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப PV 8645 என்ற பதிவு இலக்கத்தை உடையதும் இல. 361, கண்டி வீதி, நிட்டம்புவவில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை உடையதுமான D.R. இன்டஸ்ட்ரீஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் கம்பனியின் PV 84734 என்ற பதிவு இலக்கத்தை உடையதும் இல. 361, கண்டி வீதி, நிட்டம்புவவில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை உடையதுமான டம்ரோ எலெக்ரோனிக்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் கம்பனி மற்றும் PV 95303 என்ற பதிவு இலக்கத்தை உடையதும் இல.361, கண்டி வீதி, நிட்டம்புபவில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை உடையதுமான D.R. புறபர்டி டெவலபேர்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் கம்பனி ஆகியவற்றுடனான ஒன்றிணைப்புக்கான ஒரு தீர்மானம் பற்றிய விடயம் சம்பந்தப்பட்டது.

D.R. இன்டஸ்ட்ரீஸ் ( பிரைவேட்) லிமிட்டெட்டின் டம்ரோ எலெக்ரோனிக்ஸ் ( பிரைவெட் ) லிமிட்டெட் மற்றும் D.R. புறபர்டி டெவலபேர்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் ஆகியவற்றுடனான ஒன்றிணைப்புக்கான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றியும் இது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தால் ஒன்றிணைப்பு சான்றிதழ் வழங்கப்படும் திகதியிலிருந்து செயற்பாட்டுக்கு கொண்டுவர கருதப்பட்டுள்ளது பற்றியும் இந்த அனைத்து மூன்று கம்பனிகளின் பணிப்பாளர்களின் சபைகளும் இந்த தீர்மானிக்கப்பட்ட ஒன்றிணைப்பு அனைத்து மூன்று கம்பனிகளின் நலன்களுக்கும் மிகச் சிறந்தது எனக் கருதியுள்ளதுடன் ஒன்றிணைக்கப்பட்ட D.R. இன்டஸ்ட்ரீஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் கம்பனி ஒன்றிணைப்பு செயற்பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் உடனேயே இணைப்பு சோதனையைத் திருப்திப்படுத்தும் என்பதில் திருப்பியடைந்துள்ளது பற்றியும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

ஒன்றிணைப்புத் தீர்மானத்தின் பிரதிகளை சோதனையிடுவதற்காக கம்பனியின் எந்வொரு பங்குதாரரும் அல்லது கடன் வழங்கியவரும் இல. 130, லெவல் 02, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, நெக்ஸியா கோப்பரேற் கொன்சல்ரன்ஸ் ( பிரைவெட்) லிமிட்டெட், கம்பனியின் செயலாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அவ்வாறான எந்தவொரு பங்குதாரார் அல்லது கடன் வழங்கியவர் அல்லது கம்பனி கடப்பாட்டின் கீழுள்ள எந்தவொரு நபரும் கூறப்பட்ட ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதி ஒன்றை கட்டணமின்றி இலவசமாக அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பத்தை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 4.30 மணிக்கும் இடையில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்வதற்கு உரிமை உடையவராகும்.

பணிப்பாளர்கள் சபை,
D.R. இன்டஸ்ட்ரீஸ் ( பிரைவேட்) லிமிட்டெட்,
டம்ரோ எலெக்ரோனிக்ஸ் ( பிரைவெட் ) லிமிட்டெட்,
மற்றும்
D.R. புறபர்டி டெவலபேர்ஸ் ( பிரைவேட்)
லிமிட்டெட்.

11- 23

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.*

*கம்பனியின் முன்னைய பெயர்:* போலொரே லொஜிஸ்டிக்ஸ் லங்கா ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம்:* PV 3505
*கம்பனியின் பதிவு அலுவலகத்தின் முகவரி:* 3 ஆம் மாடி, செற்மில் மெரிடைம் சென்டர், இல. 256, ஸ்ரீமத் இராமநாதன் மாவத்தை, கொழும்பு 15
*கம்பனியின் புதிய பெயர்:* சிவா ஃப்ரையிட் மெனேஜ்மன்ட் லங்கா ( பிரைவட்) லிமிட்டட்
*பெயர் மாற்றத்திற்கான திகதி:* 2024, ஒற்றோபர் 15 ஆந் திகதி

சிவா ஃப்ரையிட் மெனேஜ்மன்ட் லங்கா ( பிரைவட்) லிமிட்டட் இற்காகவும் அதன் சார்பாகவும்,

பி டபிள்யு கோர்ப்பரேட்
செக்கிரட்டேரியல் ( பிவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2024, ஒற்றோபர் 16.

11- 39

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் (சட்டம்) அந்த சட்டத்தின் 241 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய, 240 ஆவது பிரிவு விதியின்படி நிறுவனங்களின் கூட்டிணைவு தொடர்பான பொது அறிவித்தல்

சட்டத்தின் பிரிவு 240 மற்றும் பிரிவு 241 இன் கீழ் PV 1579 ஆம் இலக்க பதிவைக் கொண்ட டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட், இத்துடன் PV 6520 ஆம் இலக்க பதிவைக் கொண்ட டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட்டுடன் கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட் (PV 1579) மற்றும் டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட் ( PV 6520) இன் பணிப்பாளர்கள் சபை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 240 மற்றும் 241 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இரு நிறுவனங்களையும் கூட்டிணைப்பதற்கு 2024, செத்தெம்பர் 18 ஆந் திகதி அந்தந்த நிறுவனத்தின் சபையினால் சபைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட் என அமையும். அதன்படி, டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட் ( PV 1579) கூறப்பட்ட இரு நிறுவனங்களின் கூட்டிணைவினால் இல்லாதொழிக்கப்படுகிறது. டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட்டின் அனைத்து சொத்துகள் மற்றும் பொறுப்புகளுடன் சட்டத்தின் 245 ஆவது பிரிவின்படி டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட்டிற்கு உரித்தாகிறது.

சட்டத்தின் 244 ஆவது பிரிவு விதியின் கீழ் நிறுவனங்கள் பதிவாளரினால் தீர்மானிக்கப்படும் திகதியில் இந்தக் கூட்டிணைவு அமுலுக்கு வரும்.

எந்த ஒரு பங்குதாரர் அல்லது நிறுவனத்தின் கடன்கொடுநர் அல்லது நிறுவனம் கடப்பாட்டைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபருக்கும் 2024, நவெம்பர் 24 ஆந் திகதி வரை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 5.00 இற்கும் இடையே கட்டம் 16, "பார்க்லாண்ட்" 33, பார்க் வீதி, கொழும்பு 02 என்ற நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் கூட்டிணைவு முன்மொழிவின் பிரதிகள் பரீட்சிப்பதற்காக கிடைக்கப்பெறும்.

2024, நவெம்பர் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கூட்டிணைவு முன்மொழிவின் பிரதி ஒன்றை கட்டணம் இன்றி பெற்றுக்கொள்வதற்கு எந்த ஒரு பங்குதாரர் அல்லது நிறுவனத்தின் கடன்கொடுநர் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் கடப்பாட்டைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபருக்கும் உரிமை உள்ளது.

டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட்டின் பணிப்பாளர்கள் சபை ஆணைப்படி,

பணிப்பாளர்.

2024.10.24.

11- 53

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் ( சட்டம்) அந்த சட்டத்தின் 241 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய, 240 ஆவது பிரிவு விதியின்படி நிறுவனங்களின் கூட்டிணைவு தொடர்பான பொது அறிவித்தல்**

*சட்டத்தின் பிரிவு 240 மற்றும் 241 இன் கீழ் PV 6520ஆம் இலக்க பதிவைக் கொண்ட டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட், இத்துடன் PV 1579ஆம் இலக்க பதிவைக் கொண்ட டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட்டுடன் கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.*

*டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட், (PV 6520) மற்றும் டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட் ( PV 1579) இன் பணிப்பாளர்கள் சபை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 240 மற்றும் 241 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இரு நிறுவனங்களையும் கூட்டிணைப்பதற்கு 2024, செத்தெம்பர் 18 ஆந் திகதி அந்தந்த நிறுவனத்தின் சபையினால் சபைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட் என அமையும். அதன்படி, டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட் ( PV 1579) கூறப்பட்ட இரு நிறுவனங்களின் கூட்டிணைவினால் இல்லாதொழிக்கப்படுகிறது. டம்கோ லங்கா ( பிறைவெட்) லிமிடட்டின் அனைத்து சொத்துகள் மற்றும் பொறுப்புகளுடன் சட்டத்தின் 245 ஆவது பிரிவின்படி டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட்டிற்கு உரித்தாகிறது.*

*சட்டத்தின் 244 ஆவது பிரிவு விதியின் கீழ் நிறுவனங்கள் பதிவாளரினால் தீர்மானிக்கப்படும் திகதியில் இந்தக் கூட்டிணைவு அமுலுக்கு வரும்.*

*எந்த ஒரு பங்குதாரர் அல்லது நிறுவனத்தின் கடன்கொடுநர் அல்லது நிறுவனம் கடப்பாட்டைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபருக்கும் 2024, நவெம்பர் 24 ஆந் திகதி வரை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 5.00 இற்கும் இடையே கட்டம் 16, "பார்க்லாண்ட்" 33, பார்க் வீதி, கொழும்பு 02 என்ற நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் கூட்டிணைவு முன்மொழிவின் பிரதிகள் பரீட்சிப்பதற்காக கிடைக்கப்பெறும்.*

*2024, நவெம்பர் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கூட்டிணைவு முன்மொழிவின் பிரதி ஒன்றை கட்டணம் இன்றி பெற்றுக்கொள்வதற்கு எந்த ஒரு பங்குதாரர் அல்லது நிறுவனத்தின் கடன்கொடுநர் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் கடப்பாட்டைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபருக்கும் உரிமை உள்ளது.*

*டம்கோ லொஜிஸ்டிக்ஸ் ( பிறைவெட்) லிமிடட்டின் பணிப்பாளர்கள் சபை ஆணைப்படி,*

*பணிப்பாளர்.*

*2024.10.24.*

*11- 54*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ***அட்டவணை - 2024*** | | | | |
| ***நவெம்பர்*** | .. | வெள்ளி | 01.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2024 |
| | | வெள்ளி | 08.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2024 |
| | | வியாழன் | 14.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2024 |
| | | வெள்ளி | 22.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2024 |
| | | வெள்ளி | 29.11.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.11.2024 |
| ***திசெம்பர்*** | .. | வெள்ளி | 06.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2024 |
| | | வெள்ளி | 13.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2024 |
| | | வெள்ளி | 20.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2024 |
| | | வெள்ளி | 27.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2024 |
| | | | ***அட்டவணை - 2025*** | | | | |
| ***சனவரி*** | .. | வெள்ளி | 03.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2024 |
| | | வெள்ளி | 10.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2024 |
| | | வெள்ளி | 17.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2025 |
| | | வெள்ளி | 24.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2025 |
| | | வெள்ளி | 31.01.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2025 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*